1996 மார்ச் 1]

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், திருப்பூர் இருவேறு பஞ்சாயத்துக்களில் வருகிறது. அங்கே இதுபோல் இரு பஞ்சாயத்துக்களில் அடங்கிய பல கிராமங்கள் உள்ளன. இந்த மாதிரி இரு பஞ்சாயத்துக்களில் இருப்பதால் நிர்வாகத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த திருப்பூர் கிராமத்தை ஏதேனும் ஒரு பஞ்சாயத்தில் இணைத்து உத்தரவிட ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நீக்கப்பட்டு 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு சட்டத்திற்கு இணங்குகிற வகையில் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு 22-4-1994 முதல் அமலாக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவைகளை அமைக்கின்ற பணி, பிரிக்கின்ற பணி, தரம் உயர்த்துகின்ற பணி போன்ற கருத்துக்கள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்கும் வரை தள்ளி வைக்கலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்கும் வரை இதுபோன்ற கருத்துகளின் மீது நடவடிக்கை எடுக்க இயலாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 177, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

177—

ஆதிதிராவிடர் காலனிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*39754—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சி ஆத்தப்பம்பாளையம் ஆதிதிராவிடர் காலனிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

[1996 மார்ச் 1

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகலூர், சின்னதம்பிபாளையம் மற்றும் மைக்கேல்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் உத்தேச மதிப்பீடு *446* லட்ச ரூபாய் ஆத்தப்பம்பாளையம் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நகலூர், சின்னதம்பிபாளையம், மைக்கேல்பாளையம் ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிராமங்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் தலைமையிடம் அமைப்பது குறித்து மாவட்ட ஆட்சியரின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்று *57* திங்கள்கள் ஆகின்றன. *57* அனைத்து மாவட்ட காவல் நிலையங்களை ஏற்படுத்தி மிக சிறப்பான முறையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி செய்கின்ற இந்த நல்ல வேளையில் எங்களுடைய பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகலூர், சின்னதம்பிபாளையம் மற்றும் மைக்கேல்பாளையம் ஆகிய இந்த *3* கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு விரைவாக ஏற்பாடு செய்து அதற்காக *4* கோடிக்கு மேலாக பணம் ஒதுக்கீடு செய்து பணியினை விரைவாக செய்வதற்கு ஏற்பாடு செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். தமிழர்கள் வாழ்வில் நல் வளமும், நல் மனமும் தினம் தினம் பெருகிட வேண்டும் என்ற சிறந்த குறிக்கோளோடு செயலாற்றி வரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் ஐயா தாங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக இந்த ஒரு திட்டத்தையும் இந்த ஆண்டே *1995-96* ஆம் ஆண்டு முடிவதற்குள் செய்தால் ஏறத்தாழ *3* ஊராட்சிகளும் ஏராளமான சிறிய, சிறிய கிராமங்களும் பயன்பெறும். வறட்சியான பகுதியாக, தண்ணீர் இல்லாத பகுதியாக இருக்கிற அந்தப் பகுதிக்கு, தாங்கள் கருணையுள்ளத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் சொல்லி ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கிற அந்தக் கோரிக்கை என்பது சுமார் *4* கோடியே *46* இலட்சம் மதிப்பீட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிற குடிநீர்த் திட்டம் சம்பந்தப்பட்டது ஆகும். *4*

1996 மார்ச் 1]

கோடியே 46 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிற திட்டம் துவங்கப்படுகின்றபோது அதன் தலைமையிடம் அமைப்பது மற்றும் பகிர்மாணக் குழாய்கள் பதிப்பது போன்ற பல்வேறு பணிகள் இருக்கின்றன. நீர் ஆதாரத்தை உருவாக்குகின்ற கிணறு வெட்டுகின்ற பணிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இந்த நிதி ஆண்டே முடிப்பது என்பது எந்தவகையிலும் சாத்தியமாகாது. இன்றைக்கு இந்தத் திட்டத்தை அரசு கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதிகளுக்கெல்லாம் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற முனைப்போடு இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது. திட்டத்திற்கு உண்டான தலைமையிடம் அமைப்பது குறித்து விரைவான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, தலைமையிடம் அமைப்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது களப்பொறியாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நினைவூட்டு செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் உத்தேச மதிப்பீடு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும். ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், நிதிநிலைமைக்கேற்ப திட்டத்தினைச் செயல்படுத்த பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரங்கநாதன், கேள்வி நேரம் நடந்து கொண்டிருக்கிறது, அமைதியாக இருக்கவும்.

திரு. வே. பெரியசாமி: 1996-97 ஆம் ஆண்டு வரவு-செலவுச் திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டத்திற்கு ரூ. 482.50 கோடி ரூபாயினையும், ஊரக குடிநீர் வழங்கலுக்காக மொத்த ஒதுக்கீடு ரூ. 103.95 கோடியினையும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். தலைமை நீரேற்று நிலையத்தினை அமைக்கவும், அதற்குரிய இடத்தினை தேர்வு செய்யவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டிருப்பதாகச் சொன்னார்கள். பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இதுபற்றிக் கேட்டேன். தலைமை நீரேற்று நிலையம் ஒரு கோவிலுக்குச் சொந்தமான இடத்திலே, பவானி ஆற்றின் கரையிலே இருக்கிறது. அந்தக் கோவிலினுடைய நிர்வாகிகள் நிலம் கொடுக்கச் சம்மதித்து இருக்கிறார்கள். ஆகவே, அதிகாரிகளை துரிதமாக அனுப்பி, வேகமாகச் செயலாற்றி, தாங்கள் நடப்பு ஆண்டிலே அதைச் செயல்படுத்தி விரைந்து ஆணை வழங்குவீர்களா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றையதினம் என்னிடத்திலேயும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவரிடத்திலேயும் பேசியபோது இதுசம்பந்தமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட வருவாய் அலுவலருக்கும் நினைவூட்டுக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, தலைமையிடம் அமைப்பது சம்பந்தமாக, நிலம் எடுப்பு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறையிடம் நிச்சயமாக, வருவாய் அலுவலர்கள் பேசி, அதன் மீது மேல்நடவடிக்கை எடுத்து, இந்தத் திட்டம் நிதிநிலைமைக்கேற்ப செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *178*, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

178—

மீனவர்களுக்கு கடன் வழங்குதல்

**84652-திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கடற்கரை மீனவர் மகளிர் சங்கத்திற்கு கடன் வழங்கவும், மீனவர் துயர் துடைப்பு நிதியை மானியத்துடன் தாமதமின்றி மீனவர்களுக்கு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீன்துறை மூலம் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

தேசீய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் *1994-95*-ஆம் ஆண்டில் உறுப்பினர்கள் செலுத்திய சந்தாத் தொகைக்கு இணையாக மத்திய மற்றும் மாநில அரசின் நிவாரணத் தொகை *25,351* மீனவர்களுக்கு